[2015 பிப்ரவரி 23

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், போக்குவரத்து இணை ஆணையர் அலுவலகம், போக்குவரத்து துணை ஆணையர் அலுவலகம் உள்ளிட்ட அனைத்து அலுவலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்று மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக கட்டடப் பணிகளுக்கான நிதி வழங்கப்பட்டு, பணிகள் எடுக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யும்பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. போக்குவரத்துத் துறைக்கு இடம் ஒப்படைக்கப்பட்டபின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

51—

கரும்பு ஆராய்ச்சி நிலையம்

***54799—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், வாரணவாசி ஊராட்சி, சமத்துவபுரம் அருகே கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திராவிட இயக்கத்தினுடைய பிதாமகன் தந்தை பெரியார்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை தமிழகத்திற்குத் தந்த தமிழகத்தினுடைய பிதாமகன் பேரறிஞர் அண்ணா; கல்லறைக்குள்ளே இருந்தாலும் உலகத்தாரின் கவனத்தை இன்றைக்கும் தன்மீது ஈர்த்துக் கொண்டிருக்கின்ற ஏழைகளினுடைய பிதாமகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்; (மேசையைத் தட்டும் ஒலி) நாளை 67-வது பிறந்த நாளைக் கொண்டாடவிருக்கின்ற எங்களுடைய பிதாமகன், (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் பிதாமகன், ஏழரை கோடி தமிழக மக்களின் உள்ளங்களிலே அலைபாய்ந்து கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய பிதாமகன் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

கோடைக்கு மழையாகி, கோபுரத்து விளக்காகி, ஏழைகளுக்கு ஏந்தலாகி, தீயோரைத் துரத்த வந்த திராவிடத் தாயாகி, தமிழகத்து மக்களின் மனம் நிறைந்த மகராசி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழகத்தில், இந்தியாவிலுள்ள 67 பல்கலைக்கழகங்களில் தலைசிறந்த பல்கலைக்கழகமாம் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் வேளாண் கல்லூரிகள் நீங்கலாக தமிழகத்தில் 37 ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் அரியலூர் மாவட்டம், வாரணவாசி ஊராட்சியிலிருந்து சுமார் 80 கிலோ மீட்டர் தொலைவில் திருச்சி மாவட்டத்தில் உள்ள சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையமும், 120 கிலோ மீட்டர் தொலைவில் கடலூர் மாவட்டத்தில் உள்ள கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையமும், 300 கிலோ மீட்டர் தொலைவில் வேலூர் மாவட்டத்தில் உள்ள மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையமும் அடங்கும். இந்த மூன்று ஆராய்ச்சி நிலையங்களும் வாரணவாசி ஊராட்சி உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள கரும்பு விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. இருப்பினும், வாரணவாசி ஊராட்சியில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க

வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையானது, முத்தமிழ் ஒலிக்கின்ற முதல் வார்த்தையாய் 'அம்மா' என்றே 10 கோடி தமிழ் இன்முகம் பாசத்தால் அழைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இருப்பின், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசு இதுபற்றி பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஒன்றரை கோடி தொண்டர்களின் விழியே! எங்கள் வாழ்வின் ஒளியே! உலகத் தமிழர்களின் உள்ளத்தில் தனி ஆசனமிட்டு அமர்ந்திருக்கும் தமிழ் அன்னையே! தமிழ் மண்ணை சொர்க்க பூமியாய் மாற்றிய பூவுலகின் புனிதமே! விவசாயிகளின் ஒளிவிளக்கே! 67-வது பிறந்த நாள் காணும் அன்னையே! உங்கள் பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், தா.பழூர் ஒன்றியம், அரியலூர் ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் கிட்டத்தட்ட 15,000 ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அரியலூர் மாவட்டத்தில் மட்டும் 15,000 ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 86032, 92102 மற்றும் 94017 என்ற இரகங்களைப் பயிர் செய்கிறார்கள். அந்த விவசாயிகள் தங்கள் மண்ணுக்குத் தகுந்த, நல்ல விளைச்சல் தரக்கூடிய கரும்புப் பயிர்களை பயிர் செய்ய ஏதுவாக, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எங்கள் பகுதியில் ஒரு கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தித் தருவதற்கு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 பிப்ரவரி 23]

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள வேளாண் கல்லூரிகள் நீங்கலாக, நெல், பருத்தி, கரும்பு, நிலக்கடலை, மக்காச்சோளம், பயறு, சிறு தானியங்கள், தென்னை, மரவள்ளி, திராட்சை, மலர்கள், காய்கறிகள், தோட்டக்கலைப் பயிர்கள் என பல்வேறு பயிர்களுக்காக தமிழகத்திலுள்ள ஏழு தட்பவெப்ப மண்டலங்களுக்கு ஏற்றவகையில், 37 ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

எதிலும் புதுமை, எதிலும் பெருமை, எடுத்ததில் எல்லாம் முதன்மை என தமிழகத்தைத் தலைநிமிர்ந்து நிற்க வைத்த மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த 37 ஆராய்ச்சி நிலையங்களுக்கென வருடம் ஒன்றுக்கு ரூபாய் 94.5 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து, விவசாயிகளின் வாழ்வில் விளக்கேற்றி, விடியலைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரியலூர் மாவட்டம், வாரணவாசி ஊராட்சியில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையங்களில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன? தமிழகத்தில் வேறு எந்தப் பயிர்களுக்கெல்லாம் மண்டல ஆராய்ச்சி நிலையங்கள் செயல்படுகின்றன? மொத்தம் எத்தனை மண்டல

ஆராய்ச்சி நிலையங்கள் செயல்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், திருமானூர், தா.பழூர், அரியலூர் ஒன்றியங்களில் 15,000 ஏக்கருக்கும் மேல் அதிகப்படியாக கரும்பு சாகுபடி செய்யப்படுகின்றது. வாரணவாசியில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் கிட்டத்தட்ட 100 ஏக்கருக்கு மேல் காலியாக இருக்கின்றன. அங்கு போதிய நீர் ஆதாரங்களும் உள்ளன. இதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதியிலே கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அங்குள்ள நிலங்களில் எந்தெந்த கரும்பு இரகத்தை நடவு செய்யலாம் என்பதை அறியும் வகையில், அந்தப் பகுதிகளிலே உள்ள விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, மாதிரிப் பண்ணைகள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வோராண்டும் விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தக்கூடிய கரும்பு இரகங்கள் பற்றியும், விவசாயிகளுக்குக் கரும்பு உற்பத்தி பற்றிய அரசினுடைய ஆலோசனையையும் வழங்கிடும் வகையில், அந்த இடத்திலே மாதிரிப் பண்ணையை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏழு தட்பவெப்ப மண்டலங்களுக்கு ஏற்றவகையில் 37 ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பயிர்களுக்கு தமிழகத்தில் மண்டல ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற கேள்வியைக் கேட்டார்கள்.

மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் என்ற தாரக மந்திரத்தோடு, விவசாயிகளின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்துவதற்காக, தமிழகத்திலே

பயிரிடப்படுகின்ற நெல், பருத்தி, கரும்பு, நிலக்கடலை, மக்காச்சோளம், பயறு, சிறு தானியங்கள், தென்னை, மரவள்ளி, திராட்சை, மலர்கள், காய்கறிகள், தோட்டக்கலைப் பயிர்கள் என பல்வேறு பயிர்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் அரசு, ஆண்டுதோறும் 94.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆராய்ச்சிப் பண்ணைகளை தமிழக விவசாயிகளுடைய நலனுக்காக நடத்தி வருகிறது.

அரியலூர் மாவட்டம், வாரணவாசி ஊராட்சியிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில் திருச்சி மாவட்டத்தில் உள்ள சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையம், 120 கிலோ மீட்டர் தொலைவில் கடலூர் மாவட்டத்தில் உள்ள கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், வேலூர் மாவட்டத்தில் உள்ள மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம் என மூன்று ஆராய்ச்சி நிலையங்களும் கரும்பு பயிருக்கென செயல்பட்டு வருகின்றன. இந்த மூன்று ஆராய்ச்சி நிலையங்களும் ரூ.11 கோடி நிதிஒதுக்கீட்டில், புதிய கரும்பு இனப்பெருக்க வழிமுறைகளின்மூலம் வளர்ப்புகளை Germplasm மூலம் தேர்ந்தெடுத்து, விவசாயிகள் பயிரிடும் வகையில் புதிய இரகங்களை வெளியிட்டு வருகின்றன.

மேலும், கரும்பில் நீர்ப்பாசனம், உர மேலாண்மை, பூச்சிநோய் மேலாண்மை, களை நிர்வாகம் மற்றும் மறுதாம்பு கரும்பு உற்பத்தி, நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி முறைகள் போன்ற சிறந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்து வருகின்றன.

முற்பகல் 10-50

தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக, நடப்பாண்டில் 2,21,105 எக்டேர் பரப்பளவில் கரும்பினை விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அரியலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 7,025 எக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.